# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
*************

**முறையீட்டு மனு எண். 826/2017/பே–1**

**ஆணை எண் : 177/2017**

நாள்: 19.7.2017

திரு. ஆர். செல்வகணபதி,
11 கிழக்குத் தெரு,
உடன்குடி – 628 203. --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உடன்குடி பேரூராட்சி,
உடன்குடி – 628 203. ----- எதிர்மனுதரார்

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, சுதவிலக்கம் 11 கிழக்குத் தெருவில் உள்ள திரு. ஆர். செல்வகணபதி என்பவரது 10.06.2017 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.06.2017 அன்று பெறப்பட்டு 0826/2017 என்ற எண்ணிட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சி கிழக்குத் தெரு, 11 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு. ஆர். செல்வகணபதி அவர்களின் 10.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு குறித்து ஏற்கனவே இம்முறைமன்ற நடுவ எண்.118/2017 நாள்:20.05.2017ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது வரப்பெற்றுள்ள 10.06.2017 நாளிட்ட

மனு சீராய்வு மனுவாக உள்ளது. இதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பபட்டுள்ளது. 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் மற்றும் 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல்) விதி முறைகளில் சீராய்வு மனுக்களை விசாரிக்க வழிவகையில்லை. எனவே மேற்படி மனு மீது தக்க நடவடிக்கை தொடர உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிவைக்கக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 21/7

பெறுநர்
செயல் அலுவலர்,
உடன்குடி பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

நகல்:
திரு. ஆர். செல்வகணபதி,
11 கிழக்குத் தெரு,
உடன்குடி – 628 203,
தூத்துக்குடி மாவட்டம்.